# விலங்குகள் பாதுகாப்பு விழிப்புணர்வு ஊர்வலம்




கோவை ரேஸ்கோர்சில் நேற்று விலங்குகள் பாதுகாப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. இதில், பங்கேற்ற ஆர்வலர்கள்.

**கோவை ● செப். 19 -**

விலங்குகள் மீதான கொடுமைகளுக்கு எதிரான ஊர்வலம், ரேஸ்கோர்சில் நேற்று நடந்தது.

இந்தியாவிலுள்ள விலங்குகள் பாதுகாப்பு அமைப்புகள், நல ஆர்வலர்கள், மக்கள் ஆகியோர் இணைந்து, 'இந்தியா யுனைட்ஸ் பார் அனிமல்ஸ்' எனும் பெயரில் விலங்குகள் மீதான கொடுமைக்கு எதிரான பேரணியை, 60க்கும் மேற்பட்ட நகரங்களில் நேற்று நடத்தினர்.

கோவையில், 'ஹியூமனே அனிமல் சொசைட்டி' சார்பில் ரேஸ்கோர்ஸ் வருமான வரித்துறை அலுவலகம் முன்பு துவங்கிய பேரணி ரவுண்டானா வழியாக மீண்டும் வருமான வரித்துறை அலுவலகம் முன்பு சென்றடைந்தது. நிர்வாக அறங்காவலர் மினி தலைமையில் விலங்குகள் நல ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், மக்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி மேலாளர் அல்போன்ஸ் கூறுகையில், "இந்தியாவில் விலங்குகளுக்கு எதிரான கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. தற்போது அமலிலுள்ள, 1960ம் ஆண்டு விலங்குகள் கொடுமை தடுப்பு சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்; அபராதத்தையும், தண்டனைகளையும் கடுமையாக்கவே இப்பேரணி நடத்தினோம்," என்றார்.

Dinamalar 19-09-2016